TAMIL

# புனித ஆல்பன்’ஸ் ஆங்லிகன் ஆலயம், கோபனெகன

1887-ல் திருநிலைப்படுத்தப்பட்ட புனித ஆல்பன்’ஸ் ஆலயம், டென்மார்க்கின் ஒரே ஆங்லிகன் (Episcopal) ஆலயமாகும். இதற்கு முன்பு வரை ஆங்கிலேயர்கள் கோபெனகனிலும், எல்சினோரி (Helsingor)லும் வாடகைக் கூடங்களில் வழிபட்டனர். ஐரோப்பாவின் கான்டர்பரியிலுள்ள பேராயரின் வழிகாட்டுதலின்படி நடத்தப்படும் உலகெங்கிலுமுள்ள ஆங்லிகன் சபைகளுள் ஒன்றுதான் புனித ஆல்பன்’ஸ். இங்கு இங்கிலாந்து ஆலய வழிபாட்டு முறைகள் பின்பற்றப்படுகிறது.

## ஆலயம் உருவான விதம

இவ்வாலயம் 30 ஆண்டுகால கடின உழைப்பு மற்றும் நிதி உதவியினால் 1885-1887-ல் கட்டப்பட்டது. டென்மார்க் மன்னர் கிறிஸ்டியன்-IX (1818-1906) மகளான இளவரசி அலெக்ஸாண்ட்ரா (1844-1925) மற்றும் அவரது கணவரும் வேல்ஸ் இளவரசரும், பின்நாள் பிரிட்டன் அரசர் எட்வர்ட்-VIIமான எட்வர்டின் உதவியால் ராயல் அரண்மனைக்கு அருகில் ஆலயத்திற்கு நிலம் பெறப்பட்டது. லண்டன் நிதியுதவிக் குழுவின் தலைவர் இளவரசர் எட்வர்ட் இவ்வாலய திட்டத்தை நிறைவேற்ற மிகுந்த பிரயாசை எடுத்துக் கொண்டார்.

மன்னர் கிறிஸ்டியன்-IX, மகாராணி லூயிஸ், ரஷ்யாவின் சிசார் & சிசாரினா (அலெக்ஸாண்ட்ரா வின் சகோதரிகள்), கிரேக்கப் பிரதிநிதிகள், ஸ்கேன்டிநேவியன் அரச குடும்பத்தார் மற்றும் வேல்ஸ் இளவரசருடன் இளவரசி அலெக்ஸாண்ட்ராவால் 1885 செப்டம்பர் 19-ல் இவ்வாலயத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு, சான்றோரின் முன்னிலையில் 1887 செப்டம்பர் 17-ல் திருநிலைப்படுத்தப் பட்டது.

## ஆலயத்தின் வெளிப்புறத் தோற்றம்

புனித ஆல்பன்ஸ் ஆலயமானது ‘முற்கால ஆங்கிலேய’ விக்டோரியன் கோதிக் கட்டிடக் கலைக்கு ஒரு சிறந்த சான்று. இது விக்டோரியன் கட்டிட வல்லுநர் சர் ஆர்தர் ப்ளோம்.ஃபீல்டால் வடிவமைக்கப்பட்டு, டேனிஷ் நகரின் கட்டிடக்கலை பேராசிரியர் L. ஃபென்ஞரின் மேற்பார்வையில் கட்டப்பட்டது. ஆலயம் ஆங்கில தோற்றமளித்தாலும், அநேகக் கட்டுமானப் பொருட்கள் டென்மார்கினுடையது. கல் வேலைப்பாடுகள் மற்றும் வெளிப்புறச் சுவர்கள், தெற்கு ஸீலேண்டிலுள்ள ஃபேக்ஸ் நகரின் சுண்ணாம்பு கற்கள் மற்றும் ஸ்டீவன்ஸ் நகரின் தீக்கற்களினால் ஆனது. கோபுரச் சிகரம் ஸ்வீடனின் ஓலண்டிலுள்ள வெட்டுருக் கற்களால் ஆனது. மேற்கூரை ஷ்ரோப்ஷயர் நகரின் ப்ரோஸ்லி ஓடுகளினால் ஆனது. ஈர நிலமானதால், ஆலயம் கான்க்ரீட் தூண்களாலும், நீர்க்கசிவை உறிஞ்ச தானியங்கி பம்புகளாலும் கட்டப் பட்டுள்ளது.

## ஆலயத்தின் உட்புறத் தோற்றம்

சில நினைவுச் சின்னங்கள், ஜன்னல்கள் மற்றும் 1930-ன் துவக்கத்தில் பொருத்தப்பட்ட மின் விளக்குகள், வெப்பமூட்டும் கருவிகள் தவிர பெரிய மாற்றங்கள் 1887லிருந்து ஏதுமில்லை. உட்புறச் சுவரின் முகப்புகளும் வார்ப்பட உருவகங்களும் ஃபேக்ஸின் வெண்ணிறச் சுண்ணாம்புக் கற்களால் ஆனது. தரை ஓடுகள் யாவும் ஸ்டஃபோஷயரிலுள்ள கேம்பெல் டைல் கம்பெனியால் நன்கொடையாக அளிக்கப்பட்டது. திருமுழுக்கு நீர்த்தொட்டி (அங்கத்தினர்களை ஞானஸ்நான நீரினால் தெளித்து வரவேற்பதற்காக கதவருகே உள்ள தொட்டி), பிரசங்க மேடை, பலிப்பீடம்

(ரெரெடாஸ்) ஆகியவை டெரகோட்டா மற்றும் டௌல்டன் பொருட்களால் தயாரிக்கப்பட்டு லண்டனிலுள்ள டௌல்டன் கம்பெனியால் நன்கொடையாக வழங்கப்பட்டது.

ஆலயக் குழல் இசைக்கருவி, லண்டனிலுள்ள ஜே. டபிள்யு. வாக்கர் & சன் நிறுவத்தினரால் 1887-ல் பொருத்தப்பட்டது. 2004/5-ல் கூடுதலாக 1480 குழல் இசைக்கருவிகள் துராமிலுள்ள ஹாரிசன் & ஹாரிசன் நிறுவத்தினரால் இணைக்கப்பட்டது. எட்டு வரிசைகள் கொண்ட குழல் வடிவ மணிகள் ஆலய கோபுரத்தில் 1887-ல் ஹாரிங்டனால் நிர்மானிக்கப்பட்டது (பெரிய மணிகள் பொருத்துமளவிற்கு ஆலய கோபுரமானது கட்டப்படவில்லை). 2013-ல் அதேவகையான ஏழு மணிகள் ஹாரிங்டனால் கூடுதலாக இணைக்கப்பட்டது. வழிபாட்டிற்கு முன்பும் பின்பும் ஒலிக்கப்படும் மணிகள் பலவித நாதத்துடன் ஆலயத்தைச் சுற்றிலும் ஒலிக்கும். பலவண்ணக் கண்ணாடி ஜன்னல்கள் யாவும் மூன்றுவித காலங்களில் உருவாக்கப்பட்டது. பிரதானப் பகுதியிலுள்ள விக்டோரியன் ஜன்னல்கள் லண்டனைச் சேர்ந்த ஹியாட்டன், பட்லர் மற்றும் பெய்ன் ஆகியோரால் 1887-1901லும் பக்கவாட்டிலுள்ள இளவரசி அலெக்ஸாண்ட்ரா நினைவு ஜன்னல்கள் ஜியோப்ரி வெப் என்பவரால் 1920லும், இளவரசி வி.்.கோ நினைவு ஜன்னல்கள் 1971-ல் உள்நாட்டு கம்பெனியாலும் தயாரிக்கப்பட்டதாகும். விக்டோரியன் ஜன்னல்கள் 2011/2012-ல் ஒரு மிகப் பெரிய பாதுகாப்பு திட்டத்தின்கீழ் புதுப்பிக்கப்பட்டன.

## புனித ஆல்பன்

உரோமானியப் போர் வீரன் ஆல்பன்; தான் அடைக்கலம் தந்த, துன்பப்பட்ட குருவின் போதனைகளால் ஈர்க்கப்பட்டு, அவரைத் தேடி வந்த போர் வீரர்களிடம், அவரது உடைகளை அணிந்து தாமாகவே முன்வந்து, ‘‘சகலத்தையும் படைத்தவரான உயிருள்ள உண்மையான கடவுளை நான் வணங்கி ஆராதிக்கின்றேன்’’ என்று கூறி சரணடைந்தார். ஆல்பனின் விசுவாசத்தினால் உந்தப்பட்ட குருவும் சரணடைந்தார். இங்கிலாந்தின் முதல் வேதசாட்சியாக மரித்த புனிதர் ஆல்பன் (c.303AD) பெயர் ஆலயத்திற்கு சூட்டப்பட்டது. அவர் உபயோகித்த பொருட்கள், ஓடென்சிலுள்ள புனித மரியாள் மற்றும் புனித ஆல்பன் தேவாலயத்தில் இன்றும் பாதுகாக்கப்படுகிறது. ஆலயத்தின் வரலாற்றை அறிந்து கொள்வதற்கு ஏதுவாக *St. Alban’s History and Guide* சிறு நூல் ஆலயத்தின் முகப்பில் வைக்கப்பட்டுள்ளது.

## இன்று

இன்று சர்வதேச அளவில் ஒரே சமூகமாக, ஆங்லிகன் திருச்சபையின் பாரம்பரியத்தில் வழிபட்டுக் கொண்டிருக்கும் நாம், கடவுள் மீது பற்றுள்ள கிறிஸ்தவர்களை வரவேற்போம். தற்போது 22 நாடுகளில் உள்ள மக்கள், மற்றும் கோடையில் வருகை தரும் பயணிகள் நம் திருச்சபையின் உறுப்பினர்களாக உள்ளனர். ஆருஸிலுள்ள சபையாளர்களும் வருடத்திற்கு எட்டு முறை மொல்வாங்ஸ் கிர்கி என்னுமிடத்தில் கூடுகின்றனர்.

ஆலயத்திலிருந்து திரும்பும்முன், மெழுகுதிரி ஏற்றி பிரார்த்தனை செய்யவும், ஜெப விண்ணப்பங்களை எழுதவும் உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் தரப்பட்டுள்ளது.

***இவ்வாலயத்திற்காக ஐக்கிய இராஜ்ஜியம் மற்றும் டென்மார்க்கிலிருந்து எவ்வித நிதி உதவியும் பெற்றதில்லை. நன்கொடைகளை நன்றியுடன் வரவேற்கிறோம். நன்கொடைகளை நார்தெக்ஸ் சுவற்றிலுள்ள காணிக்கைத் தட்டில் செலுத்தலாம்.***

**புனித ஆல்பன்’ஸ் ஆலயத்திற்கு வருகை தந்தமைக்கு நன்றி.**
**இறையாசீரும் நல் வாழ்த்துக்களும். நம்பிக்கையுடன் மீண்டும் சந்திப்போம்.**